புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
ISSN: 2456-821X

# அறுபடாத தமிழர் பண்பாட்டின் அடிப்படைகள்

*முனைவர் கி.பார்த்திபராஜா*
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ் ஆய்வுத்துறை*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)*
*திருப்பத்தூர் – 635601.*

## முன்னுரை

ஒரு இனத்தின் பண்பாட்டு வெளிப்பாடுகள், அவ்வினம் நீண்ட நெடிய காலமாக உருவாக்கிக் கொண்டுள்ள பண்பாட்டு அடிப்படையிலிருந்து விளைபவை. குறுகிய கால அளவிலோ, நீண்ட நெடிய காலப் பகுதியிலோ இவை மாற்றங்களை அடையும் என்பது இயங்கியல் விதி. இப்பொதுவிதிக்கு எச்சமூகத்தின் பண்பாட்டு அம்சங்களும் விதிவிலக்காக முடியாது. தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு வெளிப்பாடுகள் இவ்விதிக்கு உட்பட்டே மாற்றங்களை அடைந்து வந்துள்ளன. ஆனால் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு அடிப்படைகள் பெரிதும் மாற்றங்களை அடைந்திடவில்லை; மாறாக வளர்ந்து தன்னை வளப்படுத்திக்கொண்டு உறுதியாகக் காலூன்றி நிற்கின்றன. தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படைகள், உலகளாவிய பொதுநோக்குக் கொண்டிருப்பவை; அறத்தின் பாற்பட்டவை; சமயம் கடந்த மானுட நோக்கை உட்கொண்டவை. தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்பு என்பது நீண்ட நெடியது என்பது மட்டுமல்ல, அதன் அறுபடாத் தொடர்ச்சியுமாகும். இக்கூறுகளைச் சமகாலப் பொருத்தப்பாட்டின் பின்னணியில் வைத்து நோக்குகிறது இக்கட்டுரை.

## பண்பாடு

பண்பாடு என்றால் ஓர் இனத்தாரின் கொள்கைகள், கோட்பாடுகள், நோக்கங்கள், இலட்சியங்கள், வாழ்க்கை முறைகள், களவொழுக்கம், கற்பொழுக்கம், அகத்திணை புறத்திணை மரபுகள், இலக்கிய மரபுகள், அரசியலமைப்புகள், ஆடை அணிகலன்கள், திருவிழாக்கள், உணவு, பொழுதுபோக்கு, விளையாட்டுகள் இவற்றையெல்லாம் குறிக்கும். (தனிநாயகம் அடிகள்; 1999; ப.25)

ஒரு பண்பாட்டுத் தொகுதிக்கு அளிக்கப்பட வேண்டிய இடத்தைத் தனிநபர்களுக்கு அளிப்பது என்பது சாராம்சத்தில் குறிப்பிட்ட பண்பாட்டின் அழுத்தமான இருப்பை மறுப்பதாகும். மற்றொரு வகையில் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டுக்கும் குறிப்பட்ட படைப்பாளி அல்லது சிந்தனையாளருக்குமான உறவு நிலையை முழுவதுமாக உள்வாங்காத நிலையே ஆகும். இந்த உறவுநிலையில் அடிப்படையை மானுடவியல் அறிஞர் ரூத் பெனிடிக்ட் பின்வருமாறு விளக்குகிறார்:

“உண்மைச் சமூகமும் தனிமனிதனும் எதிரிடையானவர்களல்ல. ஒருவனுடைய பண்பாடு அளிக்கின்ற மூலப்பொருள்களைக் கொண்டே, அவன் தன் வாழ்க்கையை அமைத்துக்கொள்கிறான். அவைகள்போதுமான அளவுக்கு இல்லையென்றால் தனி மனிதன் துன்புறுகிறான். அவை வளமாக இருந்துவிட்டால், அவனுடைய சந்தர்ப்பங்களுக்கேற்ப அவன் உயர்வதற்கு வாய்ப்புகள் கிடைக்கின்றன. நாகரிகத்திலே உள்ள மரபுக் கோள்கள் வளமாக அமைந்திருப்பதால் ஆண், பெண் இருபாலாருக்கும் அவரவர்களுடைய தேவைகள் கவனிக்கப்படுகின்றன. ஒரு வளமான சங்கீதஞானம் மரபு நிலைகளையும் சாதனங்களையும் பொறுத்தே இயங்கமுடியும். மரபையே அது இன்னும் அதிகச் செறிவுள்ளதாகச் செய்யுமாயினும்,

அந்தப்பண்பாடு அளிக்கின்ற சாதனங்களையும் சங்கீத முறையையும் ஒட்டியே அது இயங்க முடியும்" (ரூத் பெனிடிக்ட்; 1964; பக்.255, 256) என்கிறார் அவர்.

அதாவது, திருவள்ளுவரின் சிந்தனை வெளிப்பாடு என்பது முற்றிலும் தனிப்பட்ட முறையில் அவருடைய மூளையிலிருந்து உதித்தவை அல்ல; மாறாக, அவர் தான் வாழுகின்ற சமூகத்தின் பண்பாட்டு வளத்தை உட்கொண்டு, தனது தனிப்பட்ட சிந்தனையையும் கலந்து வெளிப்படுதுதலே ஆகும்.

"பண்பாட்டு வளர்ச்சியில் ஒவ்வொரு தனிமனிதனும் தன் பங்கினை அளித்தாலும், அது தனி மனிதச்சொத்தன்று, அது சமுதாயச் சாதனை. அது உருவாவதும் வளர்ச்சி பெறுவதும் ஒரு சமுதாயத்தில்தான் என்பதை மறந்துவிடக்கூடாது. ஒரு சமுதாயம் எந்த உயர்ந்த குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு முன்னேறுகிறதோ, அவற்றினைப் பண்பாடு தன்னுள் பெற்று மிளிருகிறது. ஆகவே அது குறிக்கோளினையுடையது" (ஆர்.பாலசுப்பிரமணியம்; 1981; ப.3) என்னும் கூற்றும் மேற்குறித்த கருத்தை வலுப்படுத்துகிறது.

அடிப்படை மாறாத பண்பாட்டு வெளி

தமிழர் பண்பாடு கால அடைவில் சிறிது மாறி வந்துள்ளது. ஆனால் அதனுடைய அடிப்படைக் கொள்கைகள் இத்துணை நூற்றாண்டுகளாக மாற்றங்கள் அடையவில்லை. பிறநாட்டுச் சமயங்கள் தமிழ்நாட்டில் புகுந்த போதும் தமிழ் மரபோடு இயந்தும் இணைந்தும் செயல்பட்டனர். ஆரியச் சமயமாகிய வைதீக சமயங்கள், அவைதீக சமயங்களாகிய சமணம், பௌத்தம், பிற்காலத்தில் தமிழ்ச் சமூகத்தில் ஒன்றிக் கலந்த இஸ்லாம், கிறித்தவம் என அனைத்துச் சமயங்களும் தமிழ் மரபையே தழுவின. ஐரோப்பியக் கல்வி வெளிச்சத்தால் புத்திலக்கியங்கள் படைத்த, புதிய ஆய்வுப் போக்குகளை முன்னெடுத்த எழுத்தாளர்கள் தமிழ்ப்பண்பாட்டை இழக்கவும் மாற்றவும் இல்லை என்கிறார் தனிநாயகம் அடிகள்.

"தமிழர் பண்பாடு கால அடைவில் மாற்றங்கள் அடைந்துள்ளதா எனும் வினாவிற்கு மாற்றம் அத்துணை அடைந்ததில்லை; ஆனால் வளர்ச்சி அடைந்துள்ளது என்றே கூறுதல் வேண்டும். வட ஆரியர் தமிழ்நாட்டிற்கு வந்த காலத்திலும், சமணர், ஐரோப்பியர், ஆசிய பிறநாட்டார் செல்வாக்கடைந்த காலத்திலும் தமிழர் பண்பாடு அடிப்படைக் கொள்கைகளில் அவ்வளவு மாற்றம் அடையவில்லை. பிற சமயங்களைப் போதித்த பார்ப்பனரும், சமணரும், புத்தரும், ஐரோப்பியக் கிறித்தவரும், முகமதியரும் தமிழர் பண்பாட்டைத் தழுவ முயன்றனர். இந்து சமயத்தின் வழிபாட்டு முறையும், இலக்கியங்களும் தென்னாட்டுத் தத்துவங்களால் வளம்பெற்றன. வடமொழியிலுள்ள சமய இலக்கியங்கள் பல சங்கரர், இராமானுஜர், மாதவர் போன்ற தென்னாட்டவரின் மூலமாகத் தென்னாட்டுத் தத்துவங்கள் வடமொழியில் இடம்பெற்றன. சுநீதிகுமார் சட்டர்ஜி இந்தியப் பண்பாட்டின் எழுபத்தைந்து விழுக்காடு – திராவிடப் பண்பாடு என்று குறிப்பிட்டுள்ளார். சமணரியற்றிய சிலப்பதிகாரத்தையும், புத்தரியற்றிய மணிமேகலையையும், வீரமாமுனிவரியற்றிய தேம்பாவணியையும், உமறுப்புலவர் இயற்றிய சீறாப்புராணத்தையும் ஆராயுங்காலை இவர்கள் தம் சமயங்களின் கோட்பாடுகளைக் கூறினாலும் தமிழர் பண்பாட்டை எங்ஙனம் விளக்கியுளாரென்பதும் புலனாகின்றது" (தனிநாயகம் அடிகள்; 1999; ப.28, 29) என்கிறார் அவர்.

தமிழர் பண்பாடு

ஒரு இனத்தின் பண்பாட்டுச் சட்டகங்கள், விதிமுறைகள், வழமைகள் ஆகியவை பண்பாட்டின் கூறுகளை உள்வாங்கியவை. ஒருவகையில் அவை பண்பாட்டு அடையாளங்கள். ஒரு பண்பாட்டின் அடையாள வெளிப்பாடுகள் கால மாற்றத்தால் மாறுதல்களை அடைவது இயங்கியல் விதி ஆகும். "எல்லாம் மாறும் என்ற விதியைத் தவிர, யாவும் மாறும்" என்ற கூற்றில் உண்மை பொதிந்திருப்பதை வரலாறு மெய்ப்பித்துக்கொண்டிருக்கிறது.

பண்பாட்டின் உட்கூறுகள் அல்லது வெளிப்பாடுகள் மாறுவதால் பண்பாடு மாற்றம் பெற்றுவிட்டதாகப் பொருள்கொள்வது தவறு. பண்பாட்டின் அடிப்படை எது என்ற புரிதல் அவசியமானது. பண்பாட்டுச் சட்டகத்தின் விளிம்புகள், பிசிறுகள், கோணல்கள் காலவெள்ளத்தில் தட்டிச் சரிசெய்யப்படும் என்பதை உலகப் பண்பாட்டு வரலாறு மெய்ப்பித்துக்கொண்டிருக்கிறது.

*தமிழர்களின் பண்பாட்டுச் சட்டகத் தொகுப்பான தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் பல விதிமுறைகள் அடுத்தடுத்த காலகட்டங்களில் மீறப்பட்டிருக்கின்றன; மாறியிருக்கின்றன; காணாமல் போயிருக்கின்றன. "ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன" என்ற விதியில் உயர்ந்தோர் யார் என்ற கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. "முந்நீர் வழக்கம் மகடூஉவொடில்லை" உள்ளிட்ட மகளிர் பற்றிய விதிமுறைகள் பல மாற்றம் பெற்றிருக்கின்றன. காதலை முதலில் வெளிப்படுத்துதல் பெண்களுக்கு இல்லை என்பதும் இதேபோன்றதொரு பண்பாட்டுச் சட்டகம்தான். காதலனைச் சந்திப்பதற்கான குறியிடம் சுட்டுவதற்குத்தான் தலைவிக்கு உரிமையுண்டே தவிர, அவனைத் தேடிச் சென்று சந்திப்பதற்கு உரிமையில்லை. காதலனைத் தேடிச் சென்ற வெள்ளிவீதியார் தமிழ்ப்படைப்புத் துறையில் தனித்து நோக்கப்பட்டார். 'மூட்டுவேன் கொல் தாக்குவென்கொல் ' என்று காதல் உணர்வுகளை வெளிப்படையாகப் பாடிய ஔவை, பாடினியாகவே நோக்கப்பட்டார். பிற்காலத்து 'ஆண் அறம்' பாடிய ஔவையாரோடு, சங்க கால ஔவை கலக்கப்பட்டு 'ஆர்' என்னும் மரியாதைப் பன்மை கொடுக்கப்பட்டுப் புலவராக்கப்பட்டார் என்பது இலக்கிய அரசியல் வரலாறு.*

*கவிஞர் சுகிர்தராணியின் 'காமத்திப்பூ' கவிதைத் தொகுப்பில் ஒரு கவிதை. காதலி, தலைவனைத் தேடி நள்ளிரவில் தலைவனின் இருப்பிடத்துக்குப் போவதாக அமையும்.*

*பண்பாட்டு வெளிப்பாடுகளின் மாற்றங்கள், பண்பாட்டு மாற்றங்கள் அல்ல. 'உள்ளார்ந்த அன்பும், அன்பைத் தவிர பிற யாவற்றையும் புறந்தள்ளிய அகமும்'தான் பண்பாட்டு அடிப்படை. இந்த அடிப்பட ஈராயிரம் ஆண்டுகளாகப் பெரிதும் மாற்றம் அடையவில்லை. இவ்வாறான பண்பாட்டு அடிப்படைகள் சிலவற்றை எடுத்துக்காட்டி பண்பாட்டு நெறியின் தொடர்ச்சியைக் குறித்துப் பேசுகிறார் தனிநாயகம் அடிகள்.*

*தமிழர் பண்பாட்டின் குறிக்கோள்கள்*

*தமிழர் பண்பாட்டின் வெளிப்பாடுகளைக் குறித்தே பொதுவாகப் பேசப்பட்டு வருகிறது. ஆனால் தனிநாயகம் அடிகள், தமிழர் பண்பாட்டின் குறிக்கோள்களை அடையாளப்படுத்திப் பேசுகிறார்.*

*"தமிழர் பண்பாட்டின் குறிக்கோள்கள் சிலவற்றைச் சுருக்கமாகக் கூற விரும்புகின்றேன். அவற்றை நம்மிலக்கியங்கள் பலவற்றில் தெளிவாகக் காணலாம். பரந்த உலக மனப்பான்மை ஒரு கொள்கை. ஆதலால்தான் புறநானூற்றில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்றும், வள்ளுவத்தில் "யாதானும் நாடாமால் ஊராமால்' என்றும் குறிப்பிட்டுள்ளன. விருந்தோம்பல் ஒரு சிறந்த கொள்கை. பிறரன்பு, ஈகை, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் எனும் கோட்பாடு, என் கடன் பணி செய்து கிடப்பதே, அகத்திணை புறத்திணை மரபு, மானமென்றால் உயிரையும் கொடுத்துக் காப்பாற்றும் வேட்கை, மனத்தூய்மை, விடாது முயலல் எனும் கொள்கை, யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற நிகரற்ற மனநிலை, உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்னும் உயர்ந்த இலட்சியம் என்பன தமிழர் பண்பாட்டின் அரிய சில கோட்பாடுகளென்றே கூறலாம் (தனிநாயகம் அடிகள் ; பக்.27,28) என்கிறார் அடிகள்.*

*தனிநாயகம் அடிகள் குறிப்பிடும் இப்பண்பாட்டு அடிப்படை வளமையை அறிஞர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரும் எடுத்துக்காட்டுகிறார்.*

*"தமிழர்கள் உலகத்திலிருந்து தம்மை வேறுபடுத்திக்கொள்ளும் நோக்கத்தில் திரியவில்லை; 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நம்பிக்கையில் எல்லாம் தாம் வாழ்ந்த வாழ்வின் தமிழ் நுட்பத்தைக் கண்டு மகிழ்ந்தார்கள். இதனாலேயே இந்திய ஒருமைப்பாட்டிலும் 'யாதானும் நாடாமல் ஊராமல்' என்னும் உலக ஒருமைப்பாட்டிலும் எளிதில் நம்பி வாழ்ந்தும், 'திரைக்கடல் ஓடி'த்தம் பண்பாட்டை உலகப் பண்பாடாக வளர்த்து வந்தார்கள். இந்த உலக நோக்கினால் அல்லவா சேக்கிழார், 'உலகெல்லாம்' என்று முதலிலும் இடையிலும் முடிவிலும் பாடி மகிழ்கின்றார்; சம்பந்தரும் 'ஞாலம் நின்புகழே மிக வேண்டும்' என்று பாடுகின்றார்; அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்' என்று தம் காலத்திற்கும் தம் நாட்டிற்கும் அப்பாற்பட்டவர்கள் கால்களிலும் விழுகின்றார் சுந்தரர்; 'உலகெங்கும் மேவிய தேவாயந்தொறும் மேவிய பெருமாளே' என்று பாடுகின்றார் அருணகிரி நாதர். ஆன்ம நேய ஒருமைப்பாட்டினால் விளையும் சமரச சன்மார்க்கத்தினைப் பாடுகின்றார் இராமலிங்கர்" (தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் ; 1980; ப.15.) என்கிறார் அவர்.*

உலக மனப்பான்மைக்குக் காரணம்

*தமிழர்கள் தன் இனம், மொழி, பண்பாட்டு எல்லைகளைக்கு அப்பாலும் மானுடவெளியெங்கும் தங்களின் பார்வையைச் செலுத்தியவர்கள். குறுகிய மனப்பான்மையை விட்டுத் தொலைத்து மானுடத்தை தழுவும் பரந்த உலக மனப்பானமையைத் தமிழர் பெறுவதற்கு தமிழரின் வாழ்நிலை அமைப்பும் காரணம் என்கிறார் தனிநாயகம் அடிகள். வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே தமிழர்கள் மேற்றிசை நாடுகளோடும், கீழ்த்திசை நாடுகளோடும், இந்தியாவின் வடபாகத்தோடும் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தார்கள். தமிழ்நாட்டின் உற்பத்திப் பொருட்களுக்கு உலக அளவில் பெரும் வரவேற்பு இருந்திருக்கிறது. அது உலக நாடுகள் பலவற்றின் பார்வையைத் தமிழ்நாட்டின் பக்கம் ஈர்த்திருக்கிறது. கீழ்த்திசை நாடுகளுக்குச் செல்ல வேண்டிய மேற்றிசைப் பண்டம், தமிழ்நாட்டில் இறக்கப்பட்டு வேறு மரக்கலங்களில் கீழ்த்திசை நாடுகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இவ்வாறே கீழ்த்திசைப் பண்டமும் தமிழ்நாட்டில் வைத்து மரக்கலங்களில் மேற்றிசை நாடுகளுக்கு அனுப்பட்டிருக்கிறது. இவ்வாறான வணிகத்திற்கு மேற்றிசை நூல்களே சான்று தருகின்றன என்கிறார் தனிநாயகம் அடிகளார்.*

*“இத்தாலிய நாட்டில் வாழ்ந்த ஸ்டொயிக்வாதிகள் (Stoic) உரோமப் பேரரசு காலத்தில் எவ்வாறு ஓர் உலகமனப்பான்மையை வளர்த்தார்களோ, அவ்வாறே சங்ககாலத்திற்கு முற்பட்ட காலம் தொடங்கி ஓர் உலக மனப்பான்மை தமிழ்நாட்டில் பரவியுள்ளது. “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்றும், “யாதானும் நாடாமால் ஊராமால்” என்றும் கூறுவதற்கு இம்மனப்பான்மை ஊக்கமளித்தது” (தனிநாயகம் அடிகள் ; 1999; ப.30) என்கிறார் அவர்.*

உயர்வு தாழ்வு கற்பித்தல் மனப்பாங்கு

*தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படைகளில் ஒன்று சமத்துவம் ஆகும். மனிதர்களுக்கிடையே உயர்வு தாழ்வு பல்வேறு நிலைகளில் கற்பிக்கப்பட்டு, அதன் காரணமாக வேறுபாடுகள் விதைக்கப்பட்டுச் செழிப்புடன் பயிர் செய்யப்பட்ட பல்வேறு பண்பாடுகள் உலகில் இருந்தன; இருக்கின்றன. பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்றவர்கள் கிரேக்கர் மட்டுமே உயர்ந்தவர்கள் என்றும் பிற மக்களை நாகரிகம் அற்றவர்கள் என்றும் கூறி வந்ததாகத் தனிநாயகம் அடிகள் எடுத்துக்காட்டுகிறார். வட ஆரியர் இமயமலைக்கும் விந்தியமலைக்கும் இடையேயுள்ள நிலம்தான் புண்ணியபூமி என்று கருதினர் என்கிறார். அதுமட்டுமல்லாமல், பிறப்பின் அடிப்படையில் உயர்வு தாழ்வு கற்பிப்பதைத் தங்கள் சமயத்தின் அடிப்படைக் கோட்பாடாகவே அமைத்துக்கொண்டனர். ‘பிராமண, ஷத்ரிய, வைசிய, சூத்ர’ என்னும் நால்வகைப் பகுப்பில் படிநிலைகளைக் கற்பித்தனர். தமிழ் நிலத்துக்குள்ளும், தமிழர் பண்பாட்டுக்குள்ளும், தமிழர் சிந்தனைக்குள்ளும் இப்படிநிலைகளைக் கற்பிக்க முயன்றனர். அதன் தாக்கத்திலிருந்து விடுபட முடியாத நிலையிலும் கல்வியை முன்னிறுத்திய புறப்பாடல், ‘வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும் கீழ்ப்பாலொருவன் கற்பின், மேற்பாலொருவன் அவன்கட் படுமே’ என்று பேசியது. ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்று வள்ளும் முன்வைத்த சமத்துவக் கோட்பாடு, தமிழரின் பண்பாட்டுக் கடைசலில் திரண்டுவந்த வெண் நெய் ஆகும். பாலுள் வெண் நெய்யாக ‘பிறப்பொக்கும்’ நிறைந்திருக்கிறது. வள்ளுவர் போன்ற தமிழின் மகத்தான படைப்பாளிகள், இப்பாற்கடலைக் கடைந்து திரட்சியை வெளிக்காட்டுகின்றனர்.*

*உயர்திணை எவரெவரென வரையறுத்த தமிழ் இலக்கணிகள், உயர்திணை அல்லாதனவற்றை ‘தாழ்திணை’ என்று பெயர்குறிக்காமல், உயர்திணை ‘அல்’லாத திணை என்னும் பொருளில் ‘அல்திணை’ என்று குறித்தனர். இலக்கணம் என்பது ஒரு மொழிச் செயல்பாட்டுக் கோப்பு மட்டுமல்ல; அது சமூக உறவுநிலைகளின் வெளிப்பாடு என்ற நோக்கும் தமிழ் ஆய்வாளர்களால் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களின் ‘இலக்கணமும் சமூக உறவுகளும்’ (சிவத்தம்பி.கா; 1982) அவ்வகையில் குறிப்பிடத்தக்க நூலாகும். உற்பத்தி முறைமை, சமூக உறவுகள், மொழி ஆகியவற்றுக்கு இடையிலான உறவுகளை மிக நுட்பமாகப் பேராசிரியர் ஆய்ந்துள்ளார். திணை வகுப்பு, பால், எண், வேற்றுமை, வினையமைப்பு ஆகியவற்றில் வெளிப்படும் சமூக உற்பத்தி உறவுகளை அவர் நுட்பமாக ஆய்ந்து வெளிப்படுத்தியுள்ளார்.*

*இவ்வகையில் தமிழர் தம் பண்பாட்டு அடிப்படைகளில் ஒன்று சமத்துவ நோக்கு என்பது புலனாகிறது. பிற பண்பாடுகளின் ஊடாட்டங்கள், படையெடுப்புகள், திணிப்புகள்*

*ஆகியவற்றையும் தாண்டி, இச்சமத்துவக்குரல் தமிழ் இலக்கிய நெடும்பரப்பில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.*

*சமயம் கடந்த மானுடம்*

*இறுக்கமான சட்டதிட்டங்களையும் கட்டுமானங்களையும் உடையவை சமயங்கள். சமயங்களின் இருப்பே, பிறவற்றை நிராகரிப்பதன் மூலம் தன்னைத் தக்கவைத்துக் கொள்வதுதான். ஆனால் தமிழ்நாட்டில் சமயங்களின் போதனைகளுக்கும் தத்துவார்த்தச் சிந்தனைப் பரப்பலுக்கும் ஒருபோதும் தடை இருந்ததில்லை. தமிழ்நாட்டுக்கு அப்பாலிருந்து வந்த சமயங்களெல்லாம், தத்துவங்களெல்லாம் தமிழ்நாட்டில் தடையின்றிப் போதிக்கப்பட்டன. பெரும் விழாக்களில் தத்துவவாதிகள், சமயவாதிகள் தத்தம் கொடிகளைப் பறக்கவிட்டுத் தம் கருத்துகளைப்பற்றி உரை நிகழ்த்தினர் என்கிறார் தனிநாயகம் அடிகள்.*

*சமயக் கோட்பாடுகள் கொண்டிருந்த இறுக்கமான சட்டகங்களை, தமிழ் இலக்கியவாதிகள் தளர்த்தினர் என்றும் தனிநாயகம் அடிகள் கருதுகிறார். தன் கருத்திற்கு அவர் தரும் சான்றுகள் ஆழ்ந்து நோக்கத்தக்கன.*

*"சமணரும், புத்தரும் இசைக்கலை, நடனக்கலை போன்ற கலைகளை வெறுத்தாராயினும் இளங்கோ அடிகள், திருத்தக்கதேவர் போன்றோர் தமிழ்க் கலைகளை நன்கு விரித்துக் கூறியிருக்கின்றனர். திருவள்ளுவர் சமணராக இருந்திருப்பார் என்ற கூற்றுக்கு அவருடைய காமத்துப்பாலும், இல்லறத்தைப் போற்றும்ம உறையும் முரண்பாடாக இருக்கின்றன. நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணிக்கு உரையெழுதியது போல, சமணர் எனக் கருதப்படும் இளம்பூரணர், அகத்திணையியலுக்கு உரையெழுதியுள்ளார். இடைக்காலத்தில் வைணவர், சைவர் ஆகிய பார்ப்பன உரையாசிரியர் சமணநூல்களை எத்துணை ஆர்வத்துடன் அவை இலக்கிய நூல்களெனக் கருதி, அவற்றின் மூலங்கட்கு நுட்பமான உரைகளை எழுதியிருக்கின்றனர். பிற்காலத்தில் சமயசமரசக் கீர்த்தனைகள் என்றும், சமரசக் கொள்கைகள் என்றும் எங்கு உண்மையும் அழகும் உள்ளதோ, அங்கிருந்து கருத்துக்களை நூலாசிரியர் எடுத்துத் தந்திருக்கின்றனர். பேராசிரியர் சேதுப்பிள்ளை திருக்காவலூர்க் கலம்பகத்தைப் பற்றியும், தேம்பாவணியைப் பற்றியும், சீறாப்புராணத்தைப் பற்றியும் தந்த கருத்துக்களைப் போல வேறு எவரும் எலுதியதாக நான் அறியேன். திரு.வி.கல்யாணசுந்தர முதலியார், கிறித்துவின் அருள் வேட்டல், புத்தரின் அருள் வேட்டல் போன்ற இலக்கியங்களைப்பாடி இன்புற்று வாழ்ந்தார். கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை இயேசுவைப் பற்றி, புத்தரைப்பற்றிப் பாடியுள்ளார். பிறநாடுகளிலிருந்து வந்த சமயக் குரவர் தமிழர் பண்பாட்டைக் கடைப்பிடித்து, இக்கண்ணோட்டத்துடன், தமிழர் மரபின்படியே இலக்கியங்களையும் இலக்கணங்களையும் யாத்தார்கள். வீரமாமுனிவர், கால்டுவெல்ஐயர், போப்பையர் போன்றவர்கள் இம்மனநிலையைக் கடைபிடித்து வாழ்ந்தவர்கள்" (தனிநாயகம் அடிகள் ; 1999; பக்.31, 32) என்கிறார் அவர்.*

*தனிநாயகம் அடிகள் குறிப்பிடும் சமயம் கடந்த மானுடச் சிந்தனை, தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படைகளில் ஒன்றாகப் பரந்துபட்டதாகவும் வலுவாகவும் அமைந்துள்ளது. தான் எழுதிய 'புதிய ஆத்திசூடி'க்குக் கடவுள் வாழ்த்துப் பாடும்போது, அனைத்து சமயக் கடவுளர்க்கும் இடமளித்த பாரதியார் இப்பண்பாட்டின் உச்சபட்ச அடையாளம் எனலாம்.*

*"ஆத்திசூடி இளம்பிறை யணிந்து*
*மோனத்திருக்கும் முழுவெண் மேனியான்*
*கருநிறங் கொண்டுபாற் கடல்மிசை கிடப்போன்*
*மகம்மது நபிக்கு மறையருள் புரிந்தோன்*
*ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்*
*பலவகையாகப் பரவிடும் பரம்பொருள்*
*ஒன்றே அதனியல் ஒளியுறும் அறிவாம்*
*அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்*
*அதனருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவோம்" (பாரதியார் கவிதைகள்;2002; ப.232.)*

*மகாகவி பாரதியின் சமயச் சமரச நோக்கைத் தமிழின் நவீன கவிஞர்கள்வரையிலும்கூடத் தங்களின் மரபுச் சொத்தாக வரித்துக்கொண்டுள்ளனர்.*

முடிவுரை

தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்கள், வெளிப்பாடுகளின் மாற்றங்கள் கால, தேச, வர்த்தமானங்களுக்கு உட்பட்டவை. மரபு என்பதற்காகப் பிற்போக்கான, பெண்ணடிமைத் தனத்தைப் பேணுகிற, சாதிய இழிவுகளைச் சுமக்கிற அடையாளங்களை அப்படியே தூக்கிச் சுமக்க வேண்டியதில்லை. தமிழ்ச் சமூகமும் அவ்வாறான பண்பாட்டுக் கூறுகளெனக் கருதப்பட்ட பலவற்றை உதறி எறிந்து காலவெளியில் காலடி எடுத்து வைத்திருக்கிறது என்பதைக் காணமுடியும். தமிழ் சமூகம் தனது பண்பாட்டு அடிப்படைகளை வலுவுடன் பற்றிக் கொண்டு நிற்கிறது; அவையும் காலவெளியில் பெரிதும் மாற்றங்களை அடையாமல் பாதுகாக்கப்படுகிறது என்பதை அறியமுடிகிறது.

துணை நின்ற நூல்கள்

சிவத்தம்பி கா.; ‘இலக்கணமும் சமூக உறவுகளும்’; நியு செஞ்சுரி புக் ஹவுஸ்,சென்னை; 1982.
சுப்பிரமணிய பாரதியார்; ‘பாரதியார் கவிதைகள்’; பூம்புகார் பதிப்பகம், சென்னை; 2002.
தனிநாயகம் அடிகள்; ‘தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்’; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை; 1999.
பாலசுப்பிரமணியம் ஆர். (பதி.); ‘இந்தியப் பண்பாடு’; தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை; 1981.
மீனாட்சி சுந்தரனார் தெ.பொ.; ‘தமிழும் பிற பண்பாடும்’; நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை; 1980.
ரூத் பெனிடிக்ட்; ‘பண்பாட்டுக் கோலங்கள்’; தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு – அரசாங்கம்; 1964.

********* ********* ********** ********* ********* ********** ********** **********